DVC 6/2024 தேதி 09.04.2026

PW1– காயத்ரி க/பெ மணிகண்டன்

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 26.10.2020ம் தேதி எங்களுக்கு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பு நான் Gainup தையல் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். நான் கடந்த 2023ம் வருடம் டிசம்பர் 20 ம் தேதி எனது கணவரை பிரிந்து வந்தேன். தற்போது நான் வீட்டில் தான் உள்ளேன் எந்த வேலைக்கு செய்யவில்லை. எனக்கு மருத்துவகுறைபாடு நோய் எதுவும் இல்லை. திருமணத்தின் போது 1ம்எதிர்மனுதாரருக்கு 2பவுன் கை செயின் மற்றும் அரை பவுன் மோதிரம் போட்டதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அதுபோல எனக்கு போட்டதாக சொல்லப்படும் நகைகளுக்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு அரை பவுன் மோதிரம் மட்டும் போடப்பட்டது என்றாலும் அதை நான் எடுத்து சென்று அடமானம் வைத்து எனது தாயாருக்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் கூட்டு குடும்பமாக 2, 3 எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து மூன்று வருடம் வாழ்ந்தேன். நான் திருமணமான 2, 3 மாதத்திலேயே முத்துமாரி என்பவரின் வீட்டில் தனி குடித்தனமாக சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு தாலி பெருக்கி போடும் நிகழ்ச்சி ஆறு மாதத்தில் நடந்தது. வழக்கமாக ஒரு மாதம் முதல் மூன்று மாதத்தில் நடந்துவிடும் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) என்னுடைய தாலி எதிர்மனுதாரரிடம் தான் உள்ளது, அவர்கள் தங்கத்தை எடுத்து வைத்து விட்டு பித்தளை தாலி செய்து என்னிடம் கொடுத்துவிட்டார்கள். மேற்படி விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள மனுவிலோ அல்லது எனது முதன்மை சாட்சியத்திலேயோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து தாலி பெருக்கு நிகழ்ச்சியில் எனது தாயார் தாலியுடன் சேர்ந்து கோர்க்கப்படும் காசை பித்தளை காசாக செய்ததால் அது உறவினருக்கு தெரியவந்ததால் இதுசம்பந்தமாக உறவினர்கள் கேட்டதற்கு நான் 1ம் எதிர்மனுதாரருடன் சண்டை போட்டு விட்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது அம்மா தங்க காசு தான் போட்டார்கள் ஆனால் எதிர்மனுதாரர்கள் பித்தளை காசு என்று சண்டை போட்டார்கள். நான் கோபத்தில் தாலியை வைத்துவிட்டு வந்துவிட்டேன் பின்னர் எதிர்மனுதாரர்கள் தங்க காசை எடுத்துவிட்டு பித்தளை காசை வைத்து நாடகமாடி வருகிறார்கள். எனது அம்மா பித்தளை

காசு போட்ட விபரம் வெளியே தெரியவந்துவிட்டதால் நான் தாலியுடன் பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தாலியை எதிர்மனுதாரர்கள் வீட்டில்வைத்து விட்டு வந்ததாக பொய்யா சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் I T யை படித்துவிட்டு தனியார் கம்பெனியில் பீட்டராக வேலை செய்து வருகிறார். எனது மனுவில் 1வது எதிர்மனுதாரர் எவ்வளவு சம்பளம் பெறுகிறார் என்று சொல்லியள்ளேன் என்றால் அவர் எவ்வளவு சம்பவளம் வாங்குகிறார் என்று எனக்கு தெரியாது. எனது மனுவில் 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூபாய் 20,000/– சம்பளம் பெறுவதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.என்னிடம் காட்டப்படும் எனது கணவர் மணிகண்டனுடையதா என்றால் அவருடையது தான். அந்த சம்பள சான்று **எ.மா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் பிடித்தம் போக எனது கணவருக்கு சம்பளம் 9,200/– என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சான்று நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்பு 2024ம் வருடம் அக்டோபர் மாதம் கொடுக்கப்பட்ட சம்பள சான்று என்றால் சரிதான். எனது கணவர் நான் சொல்வது போல் ரூபாய் 20,000/– பெறவில்லை என்றாலும்மாதம் ரூபாய் 9,200/– தான் பெறுகிறார் என்றால் சரியல்ல அவர் கட்சியில் உள்ளார் மற்றும் கோழிபண்ணை நடத்தி வருகிறார். மேற்படி விபரத்தை எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் இல்லை. 1வது எதிர்மனுதாரர் குழந்தை பேறுக்காக என்னிடம் 1லட்சம் பணம் கேட்டு எப்போது சண்டை போட்டார் என்றால் வீட்டில் வைத்து சண்டை போட்டார். அதற்கு வேறு சாட்சிகள் உள்ளாரா என்றால் இல்லை. சண்டை சம்பந்தமாக வீரபாண்டி காவல் நிலையத்தில் 06.07.2023ம் தேதி புகார் கொடுத்ததற்கான ரசீதோ அல்லது புகார் மனுவோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துளளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

3) எதிர்மனுதாரர்கள் என்னை அடித்து எந்த துன்புறுத்தலும் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வரதட்சணை கேட்டு அடித்து துன்புறுத்தினார்கள் நான் சகித்துக்கொண்டு வாழ்ந்தேன். 1ம் எதிர்மனுதாரர் வசித்து வரும் வீரபாண்டியில் இருந்து உசிலம்பட்டிக்கு தனி குடித்தனம் வரச்சொல்லி நான் தான் 1ம் எதிர்மனுதாரரை துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. நான் திருமணம் முடிந்த பின்பு பல நாட்கள் எனது தாயார் வீட்டில் தான் இருந்தேன் என்றால் 1ம் எதிர் மனுதாரர் என்னை அடித்துவிரட்டியதால் நான் எனது தாயார் வீட்டில் இருந்தேன். எனது கணவர் எந்த காலத்திலும் துன்புறுத்தவில்லை என்றாலும் எனது தாயாரை வீட்டிற்கு நானாக சென்றுவிட்டு இரண்டு

மாதங்கள் கழித்து தான் வருவேன் என்றால் சரியல்ல. நான் ஒவ்வொரு முறையும் உசிலம்பட்டிக்கு வரும்போது எனது பொருட்களை அடமானம் வைத்து செலவு செய்வேன் என்றால் சரியல்ல . எனது தாயாருக்கு திடீர் செலவு ஏற்பட்டால் எனது கணவரிடம் நான் சண்டைபோடுவேன் என்றால் சரியல்ல, எனது தாயார் நகராட்சியில் துப்புறவு பணியாளராக வேலை செய்துவருகிறார் எனவே அவருக்கு எந்த செலவு எனதுகணவரிடம் கேட்டதில்லை. எனது தாயார் மாதம் ரூபாய் 25,000/– ம் சம்பளம் பெறுகிறார். எனது மனுவில் எனது கணவர் வேறோரு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளார் என்று குறிப்பிட்டதற்கு அதற்கான விபரங்களை எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4) எனது பள்ளி கல்விச்சான்று கள் போன்றவற்றை நீதிமன்றத்தில் மனு செய்து எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான், கனரா வங்கி பாஸ்புக் மற்றும் ATM கார்டு போன்றவை அவர்களிடம் உள்ளது. நான் 26.09.2023ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரருடன் சண்டை போட்டுவிட்டு உசிலம்பட்டிக்கு நான் தனியாக தான் வந்தேன். அதன்பின்பு என்னை வீட்டிற்கு கூப்பிட வந்தார்களா என்றால் சண்டை போட தான் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மூன்று முறை வந்தார்கள். நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ பேச்சுவார்த்தை செய்தோமா என்றால் எனது கணவர் தாக்கல் செய்த விவாகரத்து மனு விசாரணையில் கவுன்சிலிங் போது நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ விரும்பம் தெரிவித்தேன் அதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. நாங்கள் பெரியோர்களை வைத்து பேசினோமா என்றால் இல்லை. எனது மனுவில் 1ம் எதிர்மனுதாரருடன் சமரசம் பெரியோர்களை வைத்துபேசினோம் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல உசிலம்பட்டி சேர்மனை வைத்து பேச முயற்சித்த போது எதிர்மனுதாரர்கள் வரவில்லை. சேர்மன் தங்கமலைபட்டியை விசாரிக்க தயாரா என்றால் தயார். நான் மனு தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்படி சம்பவங்கள் நடைபெற்றது என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் என்னை சமரசம் பேசி அழைத்து செல்ல தான் வந்தார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்த பின்பு தான் 1ம் எதிர்மனுதாரர்தேனி மாவட்டத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ நீதிமன்ற மனு தாக்கல் செய்தேனா என்றால் செய்யவில்லை. என்னுடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரரி ஆவார். அவர் திருமணமாகி கம்பத்தில் குடியிருந்து வருகிறார். திருமணமான காலம் முதல் எனது சகோதரி எனது தாயாருடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது சகோதரி உசிலம்பட்டி தங்கியிருந்து மதுரையில் வேலை

செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது சகோதரியின் கணவர் கம்பத்தில் JCB ஓர்க் ஷாப் வைத்துள்ளார். எனது சகோதரியின் கணவர் உசிலம்பட்டியில் வேலை பார்த்து வந்தார் என்றும் தற்போது சென்னையில் வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது சகோதரியின் கணவர் உசிலம்பட்டியில் குடியிருந்து வருவது போல் 1ம் எதிர்மனுதாரரும் உசிலம்பட்டி வருவதற்காக நான் முயற்சித்த போது தான் எங்களுக்குள் சண்டை சச்சரவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு எனது கணவருடன் சேர்ந்து வாழ விரும்பமில்லை என்றாலும் அதனால் தான் பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்தின் முதலிரவின் போது எனக்கு இந்த திருமணத்தில் விரும்பமில்லை என்றும் எனது அம்மாவின் வற்புறுத்தால் இந்த திருமணத்தை செய்து கொண்டேன் என்று எனது கணவரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு முன்பு எங்கள் ஊரைச் சேர்ந்த பிரவீன் என்பவரை 3 வருடம் காதலித்தேன் என்றும் அவரை தான் திருமணம் செய்து கொள்வேன் என்று சொன்னேன் என்றும் ஆனால் எனது வீட்டில் என்னை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்துவிட்டார்கள் என்று எனது கணவரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து ஒன்றரை வருடம் கழித்து மேற்படி பிரவீன் என்பவர் எனது கணவருக்கு போன் செய்து உன் மனைவி எனக்கு ஏன் போன் செய்கிறார் என்று கூறினார் என்றால் சரியல்ல. அதற்கு 1ம் எதிர்மனுதாரர் அவரிடம் எப்படி எனது போன் நம்பர் தெரியும் என்று கேட்டுள்ளார் அதற்கு உன் மனைவி தான் எனக்கு அடிக்கடி இந்த நம்பரில் இருந்து போன் செய்கிறார் என்றும் வேண்டுமென்றால் உனது போனை பார்த்து கொள்ளவும் என்று பிரவீன் கூறியுள்ளார். இதுபற்றி 1ம் எதிர்மனுதாரர் எனது தாயாரிடம் சொன்ன போது அவர் எனது மகள் சிறுவயது என்பதால் அவளை மன்னித்துவிடுங்கள் கூறினார் என்றால் சரியல்ல. வீரப்பாண்டியில் நாங்கள் தனியாக குடித்தனம் செய்த போது நான் உசிலம்பட்டியில் தங்க வேண்டும் என்று 1ம் எதிர்மனுதாரரை அழைத்தும் தற்கொலை செய்து கொள்வேன் என்றுமிரட்டியும் வந்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வீரப்பாண்டியில் வேலை செய்து கொண்டு உசிலம்பட்டிக்கு வராமல் இருக்கிறார் என்பதால் எனது கணவரின் அலைபேசியின் மூலம் மேற்படி எனது கணவர் வேலை செய்யும் நிறுவனத்தின் பெண் சூப்பர்வைஸ்சருக்கு தவறான குறுஞ்செய்தி அனுப்பினேன் என்றால் சரியல்ல. எனது கணவரின் அலைபேசியை இரவு முழுவதும் வீடியோவை ஆன் செய்து வைத்துவிடுவேன் என்றால் சரியல்ல. இதனால் 1ம் எதிர்மனுதாரருக்கு நிர்வாகம் மூலம் பிரச்சனை ஏற்படும்படி செய்தேன் என்றால் சரியல்ல.

5) பின்னர் வீட்டில் உள்ள கேஸ் சிலிண்டரை திறந்துவிட்டு எனது கணவர் தற்கொலை செய்து கொண்டது போல் தெரியவைப்பதற்காக அப்படி செய்து அவரை கொலை செய்ய முயற்சித்தேன் என்றால் சரியல்ல. நான் திருமணத்தின் பின்பு கூட்டு குடும்பமாக இருந்த போது 1 ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரை மருத்துவமனைக்கு அவரது இருசக்கர வாகனத்தில் அழைத்துச்சென்றதை நான் தகாத முறையில் சித்தரித்து பேசியுள்ளேன் என்றால் சரியல்ல. பல்வேறு முறையில் 1ம் எதிர்மனுதாரர் என்னை சேர்ந்து வாழ அழைத்தும் செல்லாததால் வீரபாண்டி காவல் நிலையத்தில் 07.02.2024ம் தேதி புகார் அளித்தார் என்றாலும் அந்த மனு ரசீது எண் 123/2024 என்றால் சரியல்ல . 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ பல முயற்சிகள் எடுத்தார் என்றும் நான் அவருடன் சேர்ந்து வாழ மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வீட்டில் நான் தங்குவதற்கு உரிமை அளிக்குமாறு மனுவில் கேட்டுள்ளதற்கு 1ம் எதிர்மனுதாரர் பெயரிலுள்ள வீடு எங்கு உள்ளது என்றால் வீரபாண்டி, மாதாரி காலனியில் உள்ளது. மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் இரண்டு வீடுகள் உள்ளது என்று சொன்னதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் ஏற்படுத்திய காயத்திற்கும் வன்கொடுமைக்கும் நான் எங்கு சென்று மருத்துவம் செய்துகொண்டேன் என்ற விபரத்தை எனது மனுவிலோ அல்லது அவற்றின் ஆவணங்களையோ நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு காயம் எதுவுமில்லை ஆனால் என்னை அடித்துள்ளார், வீட்டில் உள்ள பீரோ,கட்டில், டி.வி ஆகியவற்றை உடைத்துள்ளார். இதுசம்பந்தமாக புகார்கொடுத்தேனா என்றால் குடும்ப சண்டை என்பதால் நான் புகார் அளிக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் மேற்படி பொருளை உடைக்கவில்லை என்றும் நான் எப்படி பொருளை வைத்துவிட்டு வந்தேனோ அப்படியே தான் உள்ளது என்றால் சரியல்ல.

6) நான் திருமணம் முடிந்து மூன்று மாதத்தில் 1ம் எதிர்மானுதாரருடன் தனிகுடித்தனம் சென்றுவிட்டேன் என்றாலும் அதன்பிறகு 1ம் எதிர்மனுதாரர் கூட இரண்டு மற்றும் மூன்று எதிர்மனுதாரர்களுடன் தொடர்பில்லை என்றாலும் அதனால் மேற்படி 2மற்றும் 3 எதிர்மனுதாரர் என்னை குடும்ப வன்முறை செய்ததாக சொல்வது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல. தவறான சங்கதிகளை கூறி நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

S.d. Gayathri
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.